மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண்.55 /2019

**2024–ம் ஆண்டு நவம்பர் மாதம் 25–ம் நாள் திங்கள் கிழமை** பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **திருமதி. P.தேன்மொழி, உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வராஜ் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : செங்கமலை | வட்டம் | : வேப்பந்தட்டை |
| கிராமம் | : தழுதாழை | வயது | : 52/2024 |

**முதல் விசாரணை :**

1 (i) நான் இவ்வழக்கில் மூன்றாம் பிரதிவாதியாவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக எனக்காகவும், 4ம் பிரதிவாதியான எனது மனைவிக்காகவும் சேர்த்து தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை பிரதிவாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். தாவா சொத்திற்கு எனது கிரைய முன்னவர் ராஜன் என்பவர் பெயரில் உள்ள 08.09.1983ம் தேதியிட்ட வீட்டு மனை நீண்ட கால அனுபவ பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். (அது **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்திற்கு எனது மனைவியின் கிரைய முன்னவர் துரைசாமி பெயரில் உள்ள 07.03.1983ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசலை (அது **பி.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

(ii) மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பெரம்பலூர் அவர்களால் அ.வ.எண்.88/1997 வழக்கில் 16.07.1997ம் தேதியிட்டு வழங்கபட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகலை (அது **பி.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 30.10.2001ம் தேதியிட்டு தாவா சொத்தை துரைசாமி என்பவர் எனது மனைவிக்கு கிரையம் செய்து கொடுத்த கிரைய பத்திரத்தின் அசலை (அது **பி.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்திற்கு 24.07.2003ம் தேதியிட்டு எனது மனைவி காந்திமதி என்கிற கீதா பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டாவின் சான்றிட்ட நகலை (அது **பி.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்திற்கு எனது மனைவியின் கிரைய முன்னவர் ராஜன் என்பவரின் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் அசல்கள் (3 எண்ணிக்கை) (அது(3 எண்ணிக்கை) **பி.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவாவை தள்ளுபடி

செய்ய வேண்டுகிறேன். வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.